Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 06 விலை ரூபா: 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆனி 17 (01 - 07 - 1991) திங்கட்கிழமை ஓசை: 133

## பறிமுதல் ரொபிகள் முப்படைக்கு விநியோகம்

(கொழும்பு)

கரைப் பகுதிகளில் பறிமுதலாகும் வெளிநாட்டு ரொபி, சொக்லேற், இனிப்புப் பண்டங்கள் வடக்குக் கிழக்கில் யுத்தத்தில் ஈடுபட்டுள்ள சிறிலங்கா முப்படை இராணுவத்தினருக்கு வழங்கப்படுகிறது. கடந்த சில தினங்களுக்கு முன்னர் குடை உதிரிப்பாகங்களுடன் இறக்குமதி செய்யப்பட்ட ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான இனிப்புப் பண்டங்களே இவ்வாறு இராணுவத்திற்கு (6 ஆம் பக்கம் பார்க்க)

# சுவிசும் அகதிகள் விவகாரத்தில் கடும் நடவடிக்கை எடுக்க முடிவு

(சூரிச்)

வெளிநாட்டு அகதிகள் படையெடுப்பைக் கட்டுப்படுத்த புதிய நடவடிக்கைகளை எடுக்கப்போவதாக சுவிட்சர்லாந்து அரசாங்கமும் அறிவித்துள்ளது. சுவிட்சர்லாந்துக்கு வந்து சேருபவர்களில் பெரும்பான்மையானவர்கள் உண்மையான அரசியல் தஞ்சம் கோருபவர்களாக அல்லாமல் வாழ்வை வளம்படுத்திக் கொள்ளும் நோக்கமுடையவர்களாகக் காணப்படுவதே இதற்கான காரணம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வருட ஆரம்பத்திலிருந்து மே மாத நடுப்பகுதி வரை தஞ்சம் கோரி விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை 17,500 ஆகும். கடந்த வருடம் இந்த காலப் பகுதியில் விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது இது 85 சதவீதத்தால் அதிகரித்துள்ளது என கடந்த புதன்கிழமை பத்திரிகையாளர் மாநாட்டில் உரையாற்றிய சுவிட்சர்லாந்து நீதியமைச்சர் ஆர்னோல்ட்கொளர் கூறியுள்ளார்.

அகதிகளாக வகைப்படுத்தப்படாத தஞ்சக் கோரிக்கையாளர்களை நாடு கடத்த (6 ஆம் பக்கம் பார்க்க)

## ரூமேனியாவில் இருந்து 10 இலங்கையர் திரும்பினா

(கொழும்பு)

தொழில் முகவர்களினால் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காக அனுப்பப்பட்ட பத்து இலங்கை வாலிபர்கள் ரூமேனியாவில் இருந்து கடந்த வெள்ளிக்கிழமை கட்டுநாயக்கா விமான நிலையம் வந்து சேர்ந்துள்ளனர்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கப்பம் கொடுக்க மறுத்த தமிழர் சுட்டுக் கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினரும் ரெலோ குழுவினரும் இணைந்து கப்பம் கொடுக்க மறுத்த அப்பாவித் தமிழ் மகனொருவரைச் சுட்டுக் கொன்றுள்ளனர்.

நேற்றுக்காலை 9.30 மணியளவில் பெரிய போரதீவில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினரும் ரெலோ குழுவினரும் இணைந்து பெரிய போரதீவு விஜிதா இலக்றோனிக் ஒளி, ஒலி நிறுவனத்தின் உரிமையாளர் இன்னத்தம்பி தங்கராஜா (வயது 37, பெரிய போரதீவு) என்பவரைப்பணம் கேட்டுள்ளனர்.

அவர் பணம் கொடுக்க மறுக்கவே அவ்விடத்தில் வைத்து அவரைச் சுட்டுக் கொன்றுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## இரு முஸ்லிம்களைக் காணவில்லை

(மட்டக்களப்பு)

பொலநறுவை, கட்டுவான் பகுதியில் மீன்பிடிக்கச் சென்ற இரண்டு முஸ்லிம் மீனவர்களைக் காணவில்லையென பொலிஸில் புகார் செய்யப்பட்டு உள்ளது மட்டக்களப்பு பகுதியில் பெறிவெடியில் சிக்கிய இராணுவ வீரர் ஒருவர் காயமடைந்ததாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் கூறியுள்ளன.

## மரண தண்டனை

(யாழ்ப்பாணம்)

பெண்ணொருவரைப் பாலியல் வன்முறைக்குட்படுத்த முயன்ற காரணத்திற்காக விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த அந்தோனிப் பிள்ளை கிறிஸ்டி (மகேந்தி, இளவாலை, என்பவருக்கு நேற்றுமுன்தினம் சாவகச்சேரி பெருங்குளம்சந்தியில் வைத்து மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒழுக்கம், கட்டுப்பாடு, தியாகம், அர்ப்பணிப்பு மிகுந்த புலி (6 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பை பாதுகாப்பதற்கு தமிழ்க்குழுக்கள் சேவையில்

(கொழும்பு)

கொழும்பில் நான்கு தமிழ்க் குழுக்களைச் சேர்ந்தவர்கள் பாதுகாப்பு வேலைகளில் ஈடுபடுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பிலும், ஏனைய பகுதிகளிலும் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளுக்கெதிரான பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து கொழும்பிலுள்ள நான்கு தமிழ்க் குழுக்கள் சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சில் கடந்த வெள்ளிக்கிழமை மாநாடு ஒன்று இடம்பெற்றது.

புளொட், ஈ.பி.டி.பி, ஈ.பி.ஆர்.எல்.எவ், ரெலோ ஆகியவற்றின் பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் கலந்துகொண்டதாகவும், அப்போதே இந்த முடிவு எடுக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. இந்த மாநாட்டைச் சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் இணைப்பதிகாரி பிரிகேடியர் பி.ஜே.பி பெரேரா கூட்டியிருந்தார்.

சிறிலங்காவில்

## வரதனைத் தேடுவதில் முப்படையும் தீவிரம்

(கொழும்பு)

கூட்டுப் படைத் தலைமையகக் குண்டுவெடிப்பு உட்பட பல்வேறு நடவடிக்கைகளின் சூத்திரதாரி எனக்கருதப்படும் வரதன் என்ற நபரைத் தேடுவதில் முப்படையினரும், பொலிஸாரும் ஈடுபட்டுள்ளனர் என சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

வேடம் தரித்து நடமாடும் இந்த நபர் வெளிநாடு செல்லாமல் இருக்கும் வகையில் விமான நிலையத்தில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும்,

தமிழீழ விடுதலைப் புலி (6 ஆம் பக்கம் பார்க்க)

## அகதிகள் அனைவரையும் இலங்கைக்கு அனுப்புக

### -வாழப்பாடி ராமமூர்த்தி

(சென்னை)

இலங்கைத் தமிழ் அகதிமக்களில் வன்முறையாளர் யார், அகதிகள் யார்என்று இக்கருணத்தில் இனங்காண முடியாது. எனவே அவர்களை ஐக்கிய நாடுகள் சபையின் மேற்பார்வையில் இலங்கைக்கு திருப்பி அனுப்பிவைக்க வேண்டும் என்று மத்திய தொழிலாளர் நலத்துறை இணை அமைச்சரும் தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவருமான வாழப்பாடி கே. ராமமூர்த்தி கூறியுள்ளார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இரத்மலானையில் புலிகளின் நிலையம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தகவல் மையமாக செயற்பட்டுவந்த நிலையம் ஒன்றை இரத்மலானைப் பகுதியில் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர் என்று இரகசியப் பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன என்று கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

## வொய்ஸ் ஒவ் அமெரிக்கா; 1987 உடன்பாட்டை மீறிய செயல்

இலங்கையின் மேற்குக் கரைப்பகுதியில் வொய்ஸ் ஒவ் அமெரிக்கா எனப்படும் அமெரிக்க வானொலிச் சேவையின் உயர்சக்தி ஒலிபரப்பு நிலையம் அமைக்கப்படுவதற்கு இந்தியா ஆட்சேபனை தெரிவித்துள்ளது நேற்று முன்தினம் கொழும்பில் சிறிலங்கா வெளியுறவுச் செயலாளர் பேர்னாட் திலகரத்தினாவைச் சந்தித்த இந்திய வெளியுறவுச் செயலாளர் முஹ்சந்துபே இதனைத் தெரிவித்ததாக பி.ரி.ஐ செய்திக் குறிப்பொன்று கூறுகிறது.

1987ஆம் ஆண்டின் இந்திய-இலங்கை உடன்படிக்கையின் கீழ் வெளிநாட்டு ஒலிபரப்பு அமைப்புகளுடன் இலங்கை செய்து கொண்டுள்ள ஒப்பந்தம் எதுவும் இராணுவமற்றும் உளவு நோக்கங்களுக்காக பயன் படுத்தப்படமாட்டாது என்று இந்தியாவிடம் இலங்கை உறுதி கூறியுள்ளது இங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

## தகவல் கொடுப்போருக்கு 10 லட்சம் ரூபா சன்மானம்

(கொழும்பு)

கூட்டுப்படைகள் தலைமையகம் மீதான தாக்குதலைப் போன்ற குண்டுத் தாக்குதல்களை கொழும்பு நகரில் நடத்தும் திட்டத்திற்காக மேலும் இருவான்கள் தயார் செய்யப்பட்டிருப்பதாக பொலிஸ் விசேட புலனாய்வுக் குழுவிற்கு தகவல் கிடைத்திருப்பதாகத் தெரியவருகிறது.

இத்தகைய வாகனங்களைப் பற்றித் தகவல் கொடுப்போருக்கு பத்து லட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## 8,000 ஆசிரியர்களை நியமிக்கத் தீர்மானம்

(கொழும்பு)

எண்ணாயிரம் ஆசிரியர்களை புதிதாக சேவையில் சேர்த்துக் கொள்ள கல்விச் சேவைகள் ஆணைக் குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

தமிழ், ஆங்கில மற்றும் சிங்கள ஆசிரியர்களே இவ்வாறு சேவையில் சேர்த்துக் கொள்ளப் படவுள்ளதாக கல்விச் சேவைகள் நிர்வாகக் குழுவின் செயலாளர் அறிவித்துள்ளார்

76ஆம் நாள் வீட்டுக்கிருத்தியத்தில்

## நினைவு கூரும்



மண்ணில் 20 | 12 | 1904

விண்ணில் 17 | 04 | 1991

### சின்னையா சுந்தரம்


திதி : 01-07-1991

சுந்தரப் பேருடன் சுந்தர வாழ்வில்
சுந்தரப் பொலிவு கண்ட எம் அன்னையே!
சுமந்தாய் நொந்தாய் பெற்றாய் எம்மை
ஆனால் இது இறைபடைப்பின் நியதியானது
அன்னையே! துன்பங்களைச் சுமந்து இன்பங்களை
எமக்கும் எம்மைச் சேர்ந்தவர்களுக்கும்
ஈந்தாய்! ஈஃதன்றோ தாய்மைப் பண்பு
தமிழ்ப்பண்பு! ஈன்றுவந்த எம் அன்னையே!
தாய்மையின் நன்னிழலை எமக்குத் தந்து
பரிசுத்தமானாய்! பரமனுக் கானவனாய்!
உங்கள் தாய்மையின் இன்குரல்
நாமேயன்றி வேறில்லை வாழ்த்துகின்றோம்,
வணங்குகின்றோம்; தாள் பணிந்து நிற்கின்றோம்:

மக்கள், மருமகர், பேரர்.

வர்த்தலை விளான், தெல்லிப்பளை. (R/1498)

## ஓராண்டு இதய அஞ்சலி



### 2ஆம் லெப்ரினன்ட் பிரியங்கா
(செல்வி குமுதினி விஸ்வநாதபிள்ளை)

தாயின் மடியில் 25-01-1965

தாயக மீட்பில் 11-07-1990

திதி: 01-07-1991

நெஞ்சினில் பூத்த நேச உறவே!
நினைவு சோலையில் மலர்ந்த மதுர தமிழே!
அஞ்சுதல் ஆகுமோ அது தமிழ் அறமோ?
என்றவன் இங்கே - போமிஷிரும் மறக்குமோ!
வஞ்சகம் புகுந்தே நம் வாழ்விடம் தாக்க
வெஞ்சமர் தொடுத்த வீரம்தான் நினைக்குமோ!
பிஞ்சுகள் தொடரும் பெரும் பணி முடிக்கும்
பிரியங்கா! உன் கல்லறை-தினம் ஒரு மலர்சூடும்.

என்றென்றும் உங்கள் ஆத்ம சாந்திக்காகப்பிரார்த்திக்கும்
பாசமிகு பெற்றோர், சகோதரன்
சகோதரிகள், மைத்துனர்மார்

அன்னாரின் கிரியைகள் மயிலியதனை இல்லத்தில் நடைபெறும்.

நெடியகாடு,
வல்வெட்டித்துறை. (R-1474)

**வரி விளம்பரம்**

தேவை

மஞ்சள் கொன்றை விதை தேவை. ''மிக்கவைற்''யாழ்ப்பாணம். (B/2750)

### சங்காபிஷேகம்
(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், வண்ணார் பண்ணை சிறி விஸ்வலிங்க மகாகணபதி கோயில் (பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோயில்) அஷ்டோத்தர சத சங்காபிஷேகமும் மணவாளக் கோல உற்சவமும் இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. காலை 8.00 மணி முதல் பூசை நடைபெற்று மாலை 5.00 மணிக்கு விநாயகப் பெருமான் வெளிவீதி வருவார்.

### நிர்வாகசபைக் கூட்டம்

ஊர்காவற்றுறை துறைமுக அபிவிருத்திச் சங்கத்தின் விசேட நிர்வாக சபைக்கூட்டம் வரும் 3ஆம் திகதிபுதன்கிழமைமாலை 9.30 மணியளவில் வணபிதா கிருபானந்த அடிகளாரின் தலைமையில் யாழ்ப்பாணம் கண்டி வீதியிலுள்ள சங்கப் பணிமனையில் நடைபெறவுள்ளதால் நிர்வாக சபை உறுப்பினர்கள் அனைவரையும் இக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு தலைவரினால் கேட்கப்பட்டுள்ளனர்.

### வர்த்தகசங்க கலந்துரையாடல்
(யாழ்ப்பாணம்)

தற்போதைய நிலைப் பாட்டையும், வர்த்தகர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளையும் அறிந்து கொள்ளும்பொருட்டு வர்த்தக சங்கத்தினருடன் கலந்துரையாடல் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி யாழ். மாவட்டச் செயலகத்தில் கடந்த 29 ஆம் திகதி நடைபெற்றது. இக் கலந்துரையாடலில் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் திரு. கஸ்ரோ, யாழ் மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு ராஜன், தொழிற்சங்கப்பொறுப்பாளர் திரு. ரவி ஆகியோரும்வர்த்தக சங்கத்தின் தலைவர் திரு.க.வி குலரத்தினம், செயலாளர் திரு.சி.நமசிவாயம் உட்படப் 12 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

### தமிழ்த்தின பரிசளிப்பு
(அரியாலை)

யாழ் மாவட்டத்திலுள்ள ஐந்து கோட்டங்களிலும் நடைபெற்ற தமிழ்த்தினப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான மாவட்டப் போட்டிகள் வெள்ளி, சனி ஆகிய இருநாட்களும், யாழ் இந்து மகளிர் கல்லூரியில் தொடர்ந்து நடைபெற்றன.

மாவட்டப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்ச்சி சனி பிற்பகல் கல்விப் பணிப்பாளர் தலைமையில் நடைபெற்ற போது, முதலிடம் பெற்ற பலசிறந்த நிகழ்ச்சிகள் மேடையேற்றப் பட்டன. (11)

### மடுமாதா திருநாள்
(நவாலி)

நவாலி தெற்கு, அரிச்சம் பேதுருபாவிலு ஆலயத்தில் நாளை ஜூலை 2 ஆம் திகதி செவ்வாய்க்கிழமைமாலை7-00 மணிக்கு மடுமாதா திரு நாள் நடைபெறும்.

திருநாள் திருப்பலியைத் தொடர்ந்து செபமாலைமாதா சொருபத்தை வெண்கல்பவனி எடுத்துச் செல்வர். (21)

வலி-கிழக்கு பிரதேச சபை,
வரி இறுப்பாளர்களுக்கு

## ஓர் வேண்டுகோள்

கடந்த சில காலங்களாக எமது வலி-கிழக்கு பிரதேச சபைக்கு தங்களால் செலுத்தப்பட வேண்டிய சோலை வரிகள், உரிமக்கட்டணங்கள், வாடகைகள், மின்சாரக் கட்டணங்கள் சந்தைக்குத்தகைகள் ஆகியன நிலுவையாக உள்ளது. இதனால் மக்களுக்கு வேண்டிய அ முக்கிய அபிவிருத்தி வேலைகளை செய்ய இயலாமை உள்ளதென்பதை கவலையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே அச்சுவேலி, புத்தூர், நீர்வேலி, உரும்பராய், கோப்பாய் ஆகிய உப அலுவலகங்களில் அவ்வப்பகுதி மக்கள் தங்கள் நிலுவைகளை தாமதமின்றி செலுத்தி எம்முடன் ஒத்துழைக்குமாறு தயவுடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

திருமதி தனேஸ்வரி பாஸ்கரன்
விசேட ஆணையாளர்

வலி கிழக்கு பிரதேச சபை,
தலைமை அலுவலகம், நீர்வேலி
28-06-1991

(B/2749)

## நினைவு கூருகின்றோம்...

### 1991 - 07 - 01

1987 ஆம் ஆண்டு இதேதினத்தில் திருக்கோணமலைபன்குளத்தில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 2 விவசாய தமிழ்க் குடும்பங்களைச் சேர்ந்த தமிழர்கள்

வவுனியா அனந்தர்புளியங்குளத்தில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரட்டையர் உட்பட 5 தமிழர்கள்

1988ஆம் ஆண்டு பாவற்குளத்தில் இந்தியப் படையினரின் தேடுதலின் போது கைதுசெய்யப்பட்டு, காணாமற்போய், பின் சடலமாக மீட்கப்பட்ட தமிழ்ப் பொதுமகன்

1989 ஆம் ஆண்டு விசுவமடுவில் இந்தியப் படையினருடனான நேரடி மோதலின் போது வீரமரணமெய்திய

**கணேஷ்** (ஜெகநாதன் சந்திரராசா - விவேகானந்தநகர், கிளிநொச்சி)

**இலங்கேஸ்வரன்** (இசைவீரசிங்கம் இலங்கேஸ்வரன் - கோண்டாவில் வடக்கு)

1990 ஆம் ஆண்டு காங்கேசன்துறையில் காவல் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையில் சிறிலங்கா இராணுவத்தினரின் துப்பாக்கிப் பிரயோகத்தினால் வீரமரணமடைந்த

**ஜக்சன்** (துரைராசா இராசகுமார் - சுழிபுரம் மத்தி, சுழிபுரம்)

திருக்கோணமலை அரசினர் வைத்தியசாலையினுள் புகுந்த சிறிலங்கா ஊர்காவல் படையினரால் வெட்டிக் கொல்லப்பட்ட 35 தமிழர்கள்

கந்தளாயில் ஜிகாத் இயக்கத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டு எரிக்கப்பட்ட 24 தமிழர்கள்

அம்பாறை சம்மாந்துறையில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 57 தமிழர்கள்

முல்லைத்தீவில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ் இளைஞர்

வசாவிளான் ஆலடியில் சிறிலங்காப் படையினரின் தாக்குதலினால் கொல்லப்பட்ட மகாஜனக் கல்லூரி மாணவன்

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

- விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

(B- 2757)

# நம்பிக்கை ஒளியேற்றும் நற்பணியில் நாலாண்டுகள்

ஜெய்ப்பூர் செயற்கைக் கால் தொழிற்சாலையின் நாலாண்டு நிறைவையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.

### திருமதி திலகவதி யோகநாதன்
ஜெய்ப்பூர் நிறுவனம்

"இவர்கள் வாழ்வும் இனிதே அமைக" எனும் சிறந்த மனித நேயப் பண்பு மீதார யுத்த நடவடிக்கைகளினாலும், வாகன விபத்துக்களினாலும், இயந்திர விபத்துக்களினாலும் இயற்கை நோய்களினாலும் கால், கை இழந்து அங்கவீனர்களாகப் பரிதவிக்கும் பலருக்கு வாழ்வில் ஒளியேற்றும் தீபமாக, லட்சிய நோக்குடன் பணிபுரியும் யாழ். ஜெய்ப்பூர் செயற்கைக்கால் தொழிற்சாலைக்கு இன்றுடன் நாலாண்டுகள் பூர்த்தியாகிறது. இத்தொழிற்சாலை உருவாகிய வரலாறு, இதனுடைய செயற்பாடுகள், செயற்திட்டங்கள், இன்றைய இக்கட்டான சூழ்நிலையில் இதன் செயற்திறனுக்கு சவாலாக எழுந்துள்ள தடைகள் மற்றும் பற்றாக்குறைகள் என்பன போன்ற பல விடயங்களை அறிய தவர்கள் எம் மத்தியில் இன்னும் பலர் இருக்கிறார்கள். இவற்றை அவர்களுக்கு விளக்கிக்கூறி அங்கபாதிப்புள்ளோரின் புனருத்தாரணத்தில் சகலரும் இன்னும் கூடுதலாக ஈடுபட வேண்டிய அவசியத்தை வலியுறுத்துவது எமது தொழில் நிறுவனத்தின் கடமையாகும்.

1983ஆம் ஆண்டு ஜூலை மாதத்திற்குப் பின் எம்நாட்டில் குறிப்பாக வட பகுதியில் யுத்த நிகழ்வுகள் தீவிரமாகி வான் தாக்குதல், மிதிவெடி விபத்துக்கள் மற்றும் வன்முறைச் சம்பவங்கள் அதிகமாகி கை, கால் துண்டிக்கப்பட்டோரின் எண்ணிக்கை அதிகரித்தது. யாழ் பணத்தில் இந்த அங்கவீனர்களுக்கு செயற்கை அங்கம் பொருத்தப்படும் வசதிகள் இருக்கவில்லை. கொழும்பு அல்லது இந்தியா சென்று செயற்கை அங்கங்களைப் பொருத்தி வருவது இலகுவாயிருக்கவில்லை. யுத்த நெருக்கடி, போக்குவரத்து வசதியின்மை, அதிக பணச் செலவு, தங்குமிட வசதியின்மை, மொழிக்கஷ்டம் போன்ற இன்னோரன்ன தடைகள் இருந்தன. உடல் உள பாதிப்பால் வாடி முடங்கிய இந்த அங்கவீனர்களுக்கு, தம்மைந்தர்களின் பாதுகாப்புக்காகப் போராடி யாழ்ப்பாணத்தில் அன்று ஒரு மாபெரும் சக்தி படைத்த செயற்குழுவாக இயங்கி சாதனைகள் பல ஏற்படுத்திய அன்னையர் முன்னணியினர் புனர்வாழ்வு அளிக்க முன்வந்தனர்.

நோர்வே நாட்டு 'நோரட்' நிறுவனமும், கொழும்பிலுள்ள சமூக நலன்களின் நண்பன் நட்புறவுச் சங்கமும் அன்னையரின் முயற்சிக்கு மனதார வரவேற்பும் ஆதரவும் வழங்கினர். இந்தியாவில் ஜெய்ப்பூரிலும், கொழும்பிலும் இயங்கி வந்த செயற்கைக்கால் தொழிற்சாலையின் பாணியில் யாழ்ப்பாணத்திலும் ஒரு செயற்கைக் கால் தொழிலகம் திறக்க துரித நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதற்கு முன்னோடியாக யாழ் நகரிலும் கொழும்பு நட்புறவுச் சங்கத்தின் கிளை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. இரண்டரை இலட்சத்துக்கு அதிகமான பண உதவி, தொழிற்சாலைக்கு வேண்டிய இடவசதிக்கான கட்டடச் செலவு, உபகரணங்கள், தொழில் நுட்ப ஆலோசனைகள், தொழில் நுட்பவியலாளர்களுக்கு தேவையான பயிற்சி வாய்ப்புகள் அனைத்தும் மேற்குறிப்பிட்ட ஸ்தாபனங்கள் மூலம் அன்னையர் முன்னணிக்குக் கிடைத்தன. சுருங்கக் கூறின் 1987ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதலாம் திகதியன்று அன்னையர் முன்னணியின் உதரவில் யாழ். சுண்டிக்குளி மைய பூங்கா வீதியில் ஜெய்ப்பூர் செயற்கைக் கால் தொழிற்சாலை உதயமாகியது. இந்தியாவில் ஜெய்ப்பூரில் வாழ்ந்த பிரபல எலும்பு சிகிச்சை நிபுணர் டாக்டர் P K சேதி என்பவரால் செயற்கைக்கால் அங்கம் முதன்முதலில் ஜெய்ப்பூரில் உருவாக்கப்பட்டமையால் ஜெய்ப்பூர் செயற்கைக்கால் தொழிற்சாலை என்ற சிறப்புப் பெயரிலேயே கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் இந்த நிறுவனங்கள் அமைந்தன என்பதை நாம் அறிந்திருத்தல் வேண்டும்.

இத்தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் இன்றுவரை பல இலங்கை, இந்திய இராணுவ நடவடிக்கைகளுக்கு மத்தியிலும் தன் இலட்சியமே கண்ணாக கருமமாற்றி வருகிறது. இங்கு பொருத்தப்படும் செயற்கை அங்கங்கள் எம்நாட்டின் சுவாத்தியத்திற்கு ஏற்றதாயும், எத்தொழிலும் புரிய உகந்த முறையில் அமைந்ததாயும், சரும நிறத்தை ஒத்ததாகவும், பாரம் குறைந்ததாகவும் விலையும் ஓரளவு நிதானமாகவும் இருப்பதனால் இவற்றிற்கு மக்களிடையே நல்ல வரவேற்பு இருக்கிறது. தங்குமிட வசதிகொண்ட இத்தொழிற்சாலையில் ஐந்து நாட்கள் மட்டுமே தங்கி வைத்தியப் பரிசோதனைக்கு உட்பட்டு அங்கம் பொருத்தப்பட்டு அதனைப் பாவிக்கும் பயிற்சியையும் பூரணமாகப் பெற்று தமது சொந்தக் கால்களினாலேயே நடப்பது போன்ற ஓர் உணர்வுடன் உடல் உள ஊனமற்றவர்களாக இவர்கள் மன நிறைவுடன் திரும்பிச்செல்கின்றனர். இன்றுவரை இத்தொழிற்சாலையில் ஆண், பெண் இரு பாலாருக்குமாக 434 செயற்கைக் கால் அங்கங்களும் 34 கை அங்கங்களும் 19 கலிப்பர்களும் பொருத்தப்பட்டுள்ளன.

அத்தோடு தேவை ஏற்படும் போதெல்லாம் இவற்றைத் திருத்தியும் இயற்கைக்கால் வளர்ச்சிக்கு ஏற்றதாக செயற்கைக்கால்களை மாற்றி அமைத்தும் கொடுக்கப்பட்டுள்ளன. இத்துடன் பத்து தள்ளுவண்டிகளும் (Wheel Chairs) ஐந்து முச்சக்கர வண்டிகளும் இத்தொழிற்சாலையில் உருவாக்கப்பட்டு செயற்கை அங்கங்கள் கூட பொருத்தப்பட முடியாதவாறு முடமாகிய அங்கவீனர்களுக்கு கொடுத்து உதவப்பட்டுள்ளது.

அங்கங்களைப் பொருத்துவது மாத்திரமல்லாது இவர்களது நிரந்தரப் புனர் வாழ்வுக்கும் உகந்த தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுப்பதும் அமைத்துக் கொடுப்பதும் இந்நிறுவனத்தின் இன்னொரு சிறப்புப் பணியாகும்.

செயற்கை அங்கம் பொருத்தப்பட்டோரின் சங்கம் ஒன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. உலக தரிசனம்-World Vision எனும் சர்வதேச அமைப்பு மூலம் இவர்கள் தொழில் தொடங்க கடனாக சிறு நிதி உதவிகள் பெற்றுக் கொடுக்கப்படுகின்றன. தற்போது பனை வள அபிவிருத்திச் சபையின் உதவியுடன் தொழிலைத்துக்குச் சொந்தமான மணியம் தோட்டப் பகுதியில் அமைந்துள்ள 'வசந்தபுரம்' என்னும் சிறு பண்ணையில், அங்குவிப்பபுப் பண உதவியுடன் சுயதொழில் வேலை வாய்ப்புக்கான ஒரு கைப்பணி பயிற்சி நெறியும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதோடு யாழ் போதனா வைத்தியசாலை சத்திர சிகிச்சை நிபுணரொருவரின் சேவை நயமிகுந்த உதவியால் இளம்பிள்ளை வாதம் போன்ற இயற்கைநோயினால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு வைத்திய உதவி அளிக்கப்பட்டு வருகிறது.

ஜெய்ப்பூர் அங்கங்கள் தேவைப்படும் பலருக்கு இன்னும் அவை பொருத்தப்படாத துர்ப்பாக்கிய நிலை இருக்கிறது. மூலப்பொருள்களாகிய அலுமினியம் தகடுகள், ஸ்பொஞ்சு றப்பர், உலோகச் சேர்க்கைக்குத்தேவையான வாயு சிலிண்டர்கள் இங்கு கொண்டுவரப்படுவதற்கு இராணுவப் பாதுகாப்பு சட்ட விதிகள் தடையாயிருக்கின்றன. இத்தடைகளினால் மனம் தளராது இங்கு கடமையாற்றும் பிரதம தொழில் நுட்பவியலாளரும் அவரின் உதவியாளர்களும் தங்களது நுண்ணிய புத்தி சாதுர்யத்தினாலும் பயிற்சித் திறனாலும் வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் என்ற முதுமொழிக்கு எடுத்துக்காட்டாக கிடைக்கும் எல்லாவித அலுமினியத் தகடுகளினாலும், ஒட்டறிவற் முறையைக் கையாண்டும் செயற்கை அங்கங்களைத் தயாரிக்கின்றார்கள்.

செயற்கை அங்கங்களைத் தயாரிக்க ஏற்படும் செலவு ஓரளவு கட்டுப்பாட்டிற்குள் இருந்தாலும் அச்செலவினை முழுதாகச் செலுத்தி அங்கம் பெற முடியாதவர்கள் பலர் இருக்கிறார்கள். அதோடு இத்தொழிற்சாலையும் மிகக் குறைந்த தொகையையே கட்டணமாக அறவிடுகிறது. பண வசதி படைத்தவர்களும், சமூகசேவை ஸ்தாபனங்களும் வறியவர்களுக்கு பொருத்தி அனுப்பும் செலவை தாமே முன்வந்து ஏற்கிறார்கள். அப்படி ஒன்றும் இல்லாத பட்சத்திலும் மிகவும் வறிய நிலையில் உள்ளோருக்கு இலவசமாகவே கால்கள் பொருத்தி அனுப்பப்படுகின்றனர். தொழிற்சாலையின் தங்கி கால், கை பொருத்த வருபவர்களிடமிருந்தும் பராமரிப்புப் பணமாக ஒரு சிறு அளவு தொகையே அறவிடப்பட்டு எஞ்சிய செலவை தொழிலகமே தனக்குக் கிடைக்கும் நன்கொடைகளிலிருந்து சமாளிக்கின்றது.

வறுமைகாலத்தில் கைகளை இழந்தோருக்குக் கூடுதலாகவும் மற்றும் நீரிழிவு, போலியோ போன்ற நோயினால் அங்கம் பாதிக்கப்பட்டோருக்கு அங்கம் பொருத்தியும், கலிப்பர்களை அணிவித்தும் இன்னும் நவீன முறைகளைக் கையாளவும் இத்தொழிலகம் திட்டமிட்டுள்ளது. விஸ்தரிக்கப்பட்ட சேவைகளையும் தற்போதைய சேவையையும் இன்னும் திறம்படச் செய்ய தொழிற்சாலைக்கு ஒரு நிரந்தர கட்டடம் தேவை.

இவற்றையெல்லாம் நடைமுறைப்படுத்த கூடுதலாகப் பணம் தேவைப்படுகிறது. இந்தநிதி உதவியை உள்நாட்டு வெளிநாட்டு தொண்டர் ஸ்தாபனங்களும், சமூக சேவை ஸ்தாபனங்களும் தனியார் துறைகளும், மாணவ அமைப்புக்களும், பொதுமக்களும் இன்னும் கூடுதலாக வாரிவழங்கினால், கூடிய சீக்கிரத்தில் தொழிலகத்தின் செயற்பாடு அதிகரித்து நிரந்தர அங்கவீனர்கள் என்ற இழிநிலையில் எம் சமூகத்தில் யாருமே இல்லாத ஒரு நிலையை ஏற்படுத்தலாம். சகதரப்பட்ட அங்கவீனர்களுக்கும் அங்கப் புனர்வாழ்வின் ஆரம்பத்தோடு அவர்கள் வாழ்வையும் புனரமைப்புச் செய்து, அவர்கள் பழையபடி சமூக மட்டத்தில் இரண்டறக் கலந்து சுதந்திர மனிதர்களாக நடமாடும் ஒரு சந்தோஷ நிலையையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்பது இந்த நிறுவனத்தின் பேரவாவாகும்.

---

# பாதுகாப்பு ஏற்பாட்டிற்கு மக்கள் உதவிபெற சிறிலங்கா யோசனை

(கம்புறுபிட்டி)

நாட்டின்பாதுகாப்புகுறித்து சகல பிரஜைகளுக்கும் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்துவதன் அவசியம் குறித்து பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்கா வலியுறுத்தியுள்ளார்.

வழிபாட்டுத்தலங்கள், பாடசாலைகள், பொலிஸ் நிலையங்கள் ஆகியவற்றிற்கிடையில் இணைப்பை ஏற்படுத்தி நாட்டின் பாதுகாப்பை பலப்படுத்துவது குறித்துமக்களுக்கு அறிவுறுத்தல் வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். இதனை சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவும் முன்னர் வலியுறுத்தியுள்ளார். ஜெனரல் சிறில் ரணதுங்கா நேற்று முன்தினம் கம்புறுபிட்டிய கம உதாவ திடலில் இடம் பெற்ற மாநாடொன்றில் இவற்றை தெரிவித்தார். அரசாங்க அதிபர்கள், உதவி அரசாங்க அதிபர்கள் மாகாண செயலாளர்கள், சிரேட்ட அதிகாரிகள் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

வீதிகளில் வாகனங்களை நிறுத்தி சோதனையிடுவதற்கு மக்களின் உதவியைப் பெற்றுக் கொள்வது சம்பந்தமாக யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் சுட்டிக் காட்டினார் சட்டங்களையும் பிரமாணங்களையும் விதிப்பதன் மூலமாக அல்லாது பொதுநல சேவை அடிப்படையில் இது செயற்படுத்தப்பட வேண்டும் மக்கள் விழிப்புணர்வுடன் செயற்பட்டால் கார் வெடிகுண்டுகள் பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும். சில சந்தர்ப்பங்களில் பாதுகாப்புப் படையினர் மாத்திரம் இத்தகைய பணியினை நிறைவேற்ற முடியாது. அனைவரையும் யுத்த

:சிறில் ரணதுங்கா

முனைக்கு வரும்படி அழைக்க முடியாது என்று கூறிய ஜெனரல் சிறில் ரணதுங்கா இராணுவத்தினர் தமது நடவடிக்கைகளை வெற்றிகரமாக மேற்கொண்டு வருவதாகவும் குறிப்பிட்டார்.

வடக்கு, கிழக்கு பகுதிகளில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் இராணுவ நடவடிக்கைகளை துரிதப்படுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பல பக்கங்களிலிருந்து நெருக்குதல் ஏற்படும் போது பல்வேறு இடங்களில் பாரிய குண்டுவெடிப்புக்களைச் செய்வது எதிரிகளின் தந்திரோபாயமாகும், இதற்கு கொழும்பில் நடந்த குண்டு வெடிப்பு ஒரு உதாரணமாகும்.

---

# 16 பேர் கட்டி வைத்து கழுத்து நெரித்து கொலை

(லாகூர்)

லாகூரிலுள்ள வீடொன்றினுள் புகுந்த கோஷ்டி ஒன்று வீட்டிலிருந்த பதினாறு பேரையும் கட்டிவைத்து அவர்களின் கழுத்தை நெரித்துக் கொலை செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்

கடந்த புதன்கிழமைமாலை நடைபெற்ற இச்சம்பவத்தில் நான்கு வயதுச் சிறுவன் ஒருவன் மட்டும் கொலையாளிகளிடமிருந்து தப்பியுள்ளான்.

கொலைப்பட்டவர்களில் பதினைந்து பேர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களாவர். மற்றையவர் குடும்பச்சாரதியாவர் இக் குடும்பத்தினர் உடுதுணிவர்த்தகத்தில் ஈடுபட்டு வந்ததாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் எக்காரணத்திற்காகக் கழுத்து நெரிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்கள் எனத் தெரியவில்லைஎனத் தெரிவித்த பொலிஸார் கொலையாளிகளைக் கண்டு பிடிப்பவர்களுக்கு இருபதாயிரம் டாலர் சன்மானம் வழங்கப்படும் எனவும் அறிவித்துள்ளனர்.

இதேவேளை இவர்கள் படுகொலை செய்யப்பட்டமையால் சீற்றமுற்ற ஆத்திரமடைந்த பொதுமக்கள் பொலிஸாரின் இரண்டு வாகனங்களுக்கு தீ வைத்துள்ளனர்.

---

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நாயன்மார் கட்டு சிறி இராசராசேஸ்வரிபேய்ச்சி அம்பாள் ஆலயத்தில் சிவலிங்கப் பெருமானுக்கும் பேச்சி அம்பாளுக்கும் வரும் வியாழக் கிழமை மகாகும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது. கிரியைகள் நேற்றுத் தொடங்கியது.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து பதினைந்து தினங்கள் மண்டாலபிஷேகம் நடைபெறும் என மேற்படி ஆலய பரிபாலன சபை தெரிவித்துள்ளது.

## பனந்தொழில்

# வல்லுநர் பயிற்சி நெறியில் 75 வீதமானோர் சித்தி

(பருத்தித்துறை)

தமிழீழ ஆய்வு நிறுவனம் இலங்கை பனம்பொருள் அபிவிருத்தி சபை, யாழ் மாவட்ட தெங்குபனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்க சமாசம் ஆகியன இணைந்து மேற்கொண்டு வரும் பனந்தொழில் வல்லுநர் பயிற்சி நெறியின் முதலாவது பரீட்சையில் 75 வீதமான பயிற்சி பனந்தொழில் வல்லுநர்கள் சித்தியடைந்துள்ளதாக பனந்தொழில் வல்லுநர் பயிற்சிப் பணியக அதிகாரியொருவர் ஈழநாதத்திற்குத் தெரிவித்தார்.

இப்பனந்தொழில் வல்லுநர் பயிற்சிகளை மேற்கொள்ளும் நிரந்தர தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் இப்பயிற்சி பணியகம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. நிரந்தர தொழிலைப் பெற்றுக் கொள்ளாத வல்லுநர்களுக்கு கடன் வசதிகள் செய்யப்பட்டு சுய தொழில் அபிவிருத்திக்கு வழி வகுத்துக் கொடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது இப்பனந்தொழில் வல்லுநர் பயிற்சிகள், வடமராட்சியிலுள்ள குடத்தனை வலிக்கண்டி என்னும் இடத்தில் முகாம் அமைக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன. (25)

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரீட்சை

ஐந்தாம் ஆண்டு மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை வரும் ஆகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை மட்டக்களப்பு கல்வி அலுவலகம் மேற்கொண்டுள்ளது.

இதேவேளை ஜூலை 6 ஆம் திகதி இலங்கை அதிபர் சேவை மூன்றாம் வகுப்புக்கான போட்டிப் பரீட்சை மூன்று நிலையங்களில் மட்டக்களப்பு நகரில் நடைபெறவுள்ளது. பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், இதுவரை கிடைக்காதோர் பரீட்சை ஆணையாளருடன் தொடர்பு கொள்ளுமாறு மாவட்டக் கல்வித் திணைக்களம் கேட்டுள்ளது.

# கலை, இலக்கிய இதழ் பற்றிய கலந்துரையாடல்

விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தினரால் புதிதாக வெளியிடப்பட இருக்கும் கலை, இலக்கிய இதழ் பற்றிய கருத்துக்களையும், ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்ளும் நோக்குடன் நாளை செவ்வாய்க் கிழமை பி.ப 3 மணிக்கு நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாசாலையில் கலந்துரையாடல் ஒன்று இடம் பெறவுள்ளது. விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு புதுவை இரத்தினதுரை தலைமையில் நடைபெறும் இக்கலந்துரையாடலில் கலைஞர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், இலக்கிய ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொண்டு மேலான ஆலோசனைகளை வழங்கும்படி அழைக்கப்படுகின்றனர்.

முத்தமிழ் விழாப் பிரகடனத்தின் படி வெளியிடப்பட இருக்கும் புதிய கலை, இலக்கிய இதழ் விரைவில் வெளிவருவதற்கான வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும் அறிவித்துள்ளனர்.

# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின்மடியில் ஜனனம் 18 - 06 - 1974

விலங்கொடிக்க வீரமரணம் 01 - 07 - 1990

## ஜக்சன்

### (து. இராசகுமார், சுழிபுரம்)

இவர் 01-07-90 அன்று காங்கேசன்துறையில் ஸ்ரீலங்கா இராணுவத்துடன் நடந்த நேரடி மோதலில் வீரமரணம் அடைந்தார்

முன்னையவர் வாழ்ந்த
இந்த மண்ணில்
எங்கள் உரிமையை
நிலை நாட்டும் போரில்
உயிர் தந்தவர் வரிசையில்
இணைந்து கொண்டாய் - எம்
நினைவில் நிற்கிறாய்!

உற்றார், உறவினர், நண்பர்கள்.

சுழிபுரம் மத்தி,
சுழிபுரம்.

(B/ 2756)

# 3,000 ரூபாவாகக் குறைப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை இலங்கை வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு தலா 3,000 ரூபா பணம் வழங்கப்பட்டு வருகின்றது. ஏற்கனவே இவ் வங்கி வாடிக்கையாளர் ஒருவருக்கு தலா 5,000 ரூபா பணத்தை வழங்கி வந்த போதும் கடந்த 24ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் இத்தொகை 3,000 ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை பருத்தித்துறைக்கு வந்த கப்பலில் இலங்கை வங்கிக்கும் பணம் வந்திருப்பதனால் பருத்தித்துறை இலங்கை வங்கி வாடிக்கையாளர்களுக்கு பணமாக தலா 3,000 ரூபாவை வழங்கி வருவதை மீண்டும் வெகு விரைவில் கூட்டிக் கொள்ளும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (25)

# பதவி உயர்விற்கு எதிராக ஆட்சேபனை

(கொழும்பு)

இலங்கை சுங்க திணைக்களத்தில் அத்தியட்சகராக பணியாற்றும் அதிகாரி ஒருவர் தன்னிலும் பார்க்க சகல வகையிலும் தகுதிகள் குறைந்த இன்னொருவருக்கு உதவி சுங்கப் பணிப்பாளர் பதவி வழங்கப்பட்டதை ஆட்சேபித்து உயர்நீதிமன்றத்தில் அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கொன்றை தாக்கல் செய்திருக்கிறார்.

மனுதாரரான களுத்துறையைச் சேர்ந்த எச். டி. ஜே. ஜே. பெரேரா தனது 22 பக்க மனுவில் பதினொரு பேரை பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டிருக்கிறார். இதில் நிதியமைச்சின் செயலாளர் ஆர். பாஸ்கரலிங்கம் சுங்கப் பணிப்பாளர் நாயகம் லலித் ஏ. ஹேவகே ஆகியோர் முதலாவது இரண்டாவது பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றனர்.

# மக்கள் வங்கி அமைக்க நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கை மக்கள் வங்கியின் கிளை ஒன்றை சென்னையில் திறப்பது தொடர்பாக மக்கள் வங்கி தலைமை அலுவலகம் நிதி அமைச்சின் ஊடாக இந்திய அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டுள்ளது.

இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு யாத்திரை செல்வோர் மற்றும் காரணங்களுக்காக அங்கு செல்லும் பயணிகள் நலன் கருதி இந்த வங்கி கிளை ஒன்றை திறப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

மேலும் மத்திய கிழக்கு நாடுகளில் பணிபுரியும் இலங்கையர்களின் நலன் கருதி அந்த நாடுகளிலும் மக்கள் வங்கி கிளைகளை திறக்க நடவடிக்கைகள் எடுத்த போதும் சம்பந்தப்பட்ட நாடுகளின் அரசாங்கங்கள் வெளிநாட்டு வங்கி கிளைகள் திறப்பதற்கு அதிருப்தி தெரிவித்துள்ளன எனத் தெரியவருகிறது.

# நிர்வாகிகள் தெரிவு

(கொழும்புத்துறை)

சிக்கனக்கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கத்தின் புதுவருட உத்தியோகத்தர் தெரிவு விபரம் பின்வருமாறு

தலைவர் திரு. க. பால சுப்பிரமணியம், உப தலைவர் திரு. இ. செ. ஆனந்தநாயகம், செயலாளர் தி மரியநாயகம், பொருளாளர் திரு. அ. சேவியர், நிர்வாகசபை உறுப்பினர்களாக திருவாளர்கள் பா. பராகுமுத்துவேலு மாசிலாமணி, க. க. சோபாலகிருஷ்ணன் ஆகியோரும் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டனர். (24)

# தமிழ் உணர்வு

ஆடா மயிலாய் அசையா இளம் கொடியாய்
ஓடா நதியாய் ஒரு புதிராய் - நாடெல்லாம்
வீசாத தென்றலாய் வீசும் தமிழ்ப் பெருமை
பேசாத வாய் பிணந்தின் வாய்!

புறமும் அகப்பாட்டும் காப்பியனால் பூத்த
இறவா இலக்கணத்தின் ஏடும் - குறள் மொழியும்
ஆர்க்கும் சிலம்பின் அழகு தமிழ் நடையும்
பார்க்காத கண் பாவக் கண்!

கத்து கடல் பறித்தும் கல்லாதார் தீவைத்தும்
குத்து வடமொழியின் கூர்பட்டும் - இத்தனைக்கும்
வாடாத செந்தமிழின் வரலாறு கேட்ட பின்பும்
ஆடாத கால் ஆணைக்கால்!

வானம் அளவு வளர்ந்த மொழிக்கெல்லாம்
தானம் கொடுத்த தமிழேட்டில் - ஈனம்
படைக்க வந்தாரா? அவர் பல்லை ஓங்கி
உடைக்காத கை உலக்கை!

ஆளிருந்தால் என்ன? அழிந்திருந்தாலும் என்ன?
நீள் விழியார் நெஞ்சில் நிறைந்தென்ன? - கேள்தோழா
வையம் புகழும் தமிழ்க் கவிதை என்வாழ்வில்
செய்யாத நாள் செத்த நாள்!

உணர்ச்சிக் கவிஞர்
காசி ஆனந்தன்

நன்றி: முத்தமிழ் விழா மலர்

# சிவராஜனும் சுபாவும் தப்பிச் செல்ல முயற்சி

(கொழும்பு)

எவரின் கண்ணில் படாமலும் எவரும் அடையாளம் காணாமலும் சென்னையில் தொடர்ந்து இருக்க முடியாது என்ற காரணத்தால் சிவராஜனும், சுபாவும் அங்கிருந்து தப்பிச்செல்ல முயலுகின்றனர். என்று ராஜீவ் காந்தி கொலை விசாரணைக் குழுத்தலைவர் திரு. டி. ஆர் கார்த்திகேயன் தெரிவித்துள்ளார்.

இந்த இரு இலங்கையரும் எந்நேரமும் தப்பிச் செல்லக் கூடியவகையில் தமிழகக் கடற்கரையோரப் பகுதி குறைவாலாவென்றும் குறிப்பிட்ட அவர் பொதுமக்களை மிக உன்னிப்பாக இருக்குமாறும் கேட்டுள்ளார், இவர்கள் எந்நேரமும் எந்தவாகனத்திலும், எந்த வழியாலும் செல்ல முடியும் ஆகையால் பொலிசார் மிக உன்னிப்பாக உஷார் நிலையில் இருக்க வேண்டும் என்று அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# மரண அறிவித்தல்

## திருமதி
## கதிராசிப்பிள்ளை சங்கரப்பிள்ளை

திருமதி கதிராசிப்பிள்ளை சங்கரப்பிள்ளை (30-06-91) நேற்று அதிகாலை காலமகிவிட்டார் வரணியை பிறப்பிடமாகவும், மீசாலையை வதிவிடமாகவும் கொண்ட இவர் காலம் சென்ற சங்கரப்பிள்ளையின் அன்பு மனைவியும், இராசம்மா, இராசரத்தினம், நாகம்மா, பொன்னம்பலம், லோகநாதன் ஆகியோரின் அன்புத்தாயாரும், செல்வம்மா, இராஜபூபதி, இந்திராணி, காலஞ்சென்ற சின்னத்தம்பி, சரத்தினம் ஆகியோரின் அன்பு மாமியும், தேவகலா, ராணி(பிரான்ஸ்), ரஞ்சினி, அப்பன்(பிரான்ஸ்) ரஞ்சன், தேவன்(பிரான்ஸ்) தேவி, குணம், ஸ்ரீ, தரணி, நகுலன், தர்ஷா, வர்ணன், சகிலன், ஹரன், தாமினி, சேனை, சிந்து, காந்தி (சவூதி), இரத்தினம் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சுமதி, புவி, வினோ, லக்சன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

ஈமக் கிரியைகள் இன்று (01 - 07 - 91) திங்கட்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வேம்பிராய் மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும்.

மீசாலை வடக்கு,
கொடிகாமம்.

தகவல்:
க. ச. இராசரத்தினம்

(R/1499)


புதிய உயர் கல்லூரி, ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

A/L 91 DAY CLASSES

கணக்கியல் - ராஜன்

வினா - விடை

ஆரம்பம் 01-07-91(12 மணி)

SPOKEN ENGLISH
WITH GRAMMAR
BY BRITTO

புதிய பிரிவு ஆரம்பம் 3 - 7 - 91 (11 மணி)

B- 2758)

### சிந்தனைக்கு

மனித இனத்திற்குச் செய்யும் சேவையே,
இன்னும் சொல்லப்போனால்,
உயிர்ராசி அனைத்துக்கும் செய்யும் சேவையே
மகத்தானது

— மகாத்மாகாந்தி

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம். 01.07.1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
தூபெ.எண் 05

# நெருக்கடி மத்தியிலும் சேவை புரியும் ஜெய்ப்பூர்

அங்கவீனர்கள் சமூகத்தின் ஓர் அங்கம்; அவர்கள் பராமரிக்கப்பட வேண்டியவர்கள் அதேவேளை அவர்களின் தன்நம்பிக்கை வளர்த்தெடுக்கப்பட வேண்டும்; சமூகத்தில் அவர்கள் புறக்கணிப்பிற்கு உள்ளாக்கப்படக் கூடாது. அவர்கள் மனங்களில் தாம் புறக்கணிக்கப் படுவதாக ஒரு எண்ணம் உருவாகக் கூடாது;

தமிழ்ப் பிரதேசங்களின் மீதான சிறிலங்கா இராணுவத்தின் கண் மூடித்தனமான தாக்குதலின் காரணமாகவும் தொடர்ச்சியான போரின் காரணமாகவும் அங்கவீனர்களின் தொகை சாதாரண விகிதாசாரத்தைவிட அதிகமானதாகும். இவர்கள் இன்று சமூகத்தில் பரந்து காணப்படுகின்றனர், பல பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றனர்;

ஆனால் தமிழ்ப் பிரதேசங்களின் மீது திடீர் பொருளாதாரத் தடையை விதித்துள்ள சிறிலங்கா அரசாங்கம் அத்தியாவசியப் பொருள்கள், மருந்துப் பொருள்கள் மீதும் தீவிர கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. காயமடைந்தவர்களுக்கே மருந்துப் பொருள்களை அனுப்பாத சிறிலங்கா அரசாங்கம் எமது அங்கவீனர்களையோ, ஏனைய குறைபாடுகள் உள்ளோரையோ கவனத்தில் எடுக்கும் புனர்வாழ்வு வழங்கும் என நாம் எதிர்பார்ப்பது தவறாகும்,

மேலும், எமது மண்ணில் இருந்தே வைத்தியர்களும், தொழில்நுட்பவியலாளர்களும் வெளியேறிக் கொண்டிருக்கின்றனர். தமது சமூகத்தில் தமக்குள்ள கடப்பாடுகளை அவர்கள் மறுக்கின்றார்கள். தமது இன விடுதலைக்கான பங்களிப்பைச் செய்வதில் அவர்கள் பின்னிற்கின்றார்கள்.

இந்நிலையிலும், சிறிலங்கா, இந்திய இராணுவங்களின் நெருக்கடியின் மத்தியிலும் ஜெய்ப்பூர் செயற்கைக்கால் தொழிற்சாலை தனது நான்காவது வருடத்தை யாழ்ப்பாணத்தில் பூர்த்தி செய்வது மிகவும் பாராட்டப்பட வேண்டிய விடயம் என்பதில் ஐயம் எதுவுமில்லை;

சிறிலங்கா அரசாங்கத்தின் பொருளாதாரத்தடை தமிழ்ப் பிரதேசங்களின் சகல நடவடிக்கைகளையும் பாதித்தது போன்று ஜெய்ப்பூர் செயற்கைக்கால் தொழிற்சாலையையும் பாதித்தது தொழிற்சாலைக்குத் தேவையான மூலப்பொருள்கள், சக்திப்பொருள்கள் என்பனவற்றிற்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்ட அதேவேளை முக்கிய உதிரிப் பாகங்களையும் சிறிலங்கா அரசாங்கம் கொழும்பில் இருந்து அனுப்புவதற்கு தடைகளை விதித்தது இந்தத் தொழிற்சாலைக்கு அனுப்பப்பட்ட சுமார் 200 பாதங்கள் வவுனியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன;

ஆனால், தமிழ்ப் பிரதேசத்தில் ஏனைய தொழிற்றுறைகள், பொருளாதார நடவடிக்கைகளின் செயற்பாடுகள் நாட்டின் யுத்த சூழ்நிலைக்கு ஏற்ப மாற்றி அமைக்கப்பட்டது போன்று ஜெய்ப்பூர் செயற்கைக்கால் தொழிற்சாலையும் தனது தொழில்நுட்ப முறைகளை மாற்றியதோடு மூலப்பொருள்களைப் பெறுவதற்கும் மாற்று வழிகள் கண்டறியப்பட்டு தொழிற்சாலை தனது சேவைகளைத் தொடர்ந்தமை அவர்களின் விடா முயற்சியையும் சேவை மனப்பான்மையையும் வெளிக்காட்டும் விடயமாகும்.

மூலப்பொருள்களுக்குத் தேவையான அலுமினியத் தகடுகள் யாழ் கோட்டைவர சிறிலங்கா முப்படைகளின் கூட்டுத் தலைமையகம் தடைவிதித்ததினால் நெருக்கடிக்குள்ளான தொழிற்சாலை உள்ளூரில் இருந்து பெறப்பட்ட அலுமினியப் பாத்திரங்களில் இருந்து தமக்குத் தேவையான அலுமினியத் தகடுகளைப் பெற்றது. இதேபோன்று ஏனைய தேவைகளும் பெறப்பட்டன இதன் மூலமும் தமது சேவையை நெருக்கடிவேளையிலும் ஜெய்ப்பூர் செயற்கைக் கால் தொழிற்சாலை தொடர்ந்தது / தொடர்கிறது.

மேலும், ஜெய்ப்பூர் செயற்கைக்கால் நிறுவனம் தனது சேவையை தனியாக செயற்கைக்கால் பொருத்துவதுடன் நின்றுவிடாமல் மேலும் அங்கவீனர்களுக்கு நல்வாழ்வைத் தேடும் தனது பணியை விஸ்தரித்தது. பொருளாதார நெருக்கடியும், வசதியின்மையும் இருந்தபோதும் இந்நிறுவனத்தின் சேவை விஸ்தரிப்பு தமிழ் மக்களின் குறிப்பாக பாதிக்கப்பட்ட அங்கவீனர்களான வறிய மக்களுக்கு பெரிதும் உறுதுணையாகும்.

கடந்த ஒருவருடகாலப் போர் சூழ்நிலையில் இலாப நோக்கில் இயங்கிவரும் பல்வேறு தொழில்நிறுவனங்கள் கூட இயங்காத நிலையில் சேவை நோக்கில் இயங்கும் இந்த நிறுவனத்தின் சேவை பாராட்டிற்குரியது. ஒரு பகுதி மக்களின் அத்தியாவசிய தேவைக்குரியது இந்நிலையில் இந்நிறுவனத்தின் சேவை தொடர அந்நிறுவனத்தின் நெருக்கடிகளைத் தீர்த்துவைக்க சமூக நலன் விரும்பிகள் முன்வரவேண்டும்; சமூகத்தின் தேவை கருதிச் செயற்படுதல் மக்களின் கடமையாகும்.

# திரிக்கப்பட்ட வரலாறு திருத்தப்படல் வேண்டும்

'சிங்கள ஆட்சியாளர்கள் தமிழினத்தின் வரலாறு பாரம்பரிய வாழ்விடம் கலை பண்பாடுகள் போன்ற தேசிய அடையாளங்களை அழித்தொழிக்கும் முயற்சியில் முனைப்பாக இயங்கியிருக்கின்றனர். இந்த இன அழிப்பு முயற்சியை எதிர்த்து எதிரிகளால் கையகப்படுத்தப்பட்ட எமது பாரம்பரிய மண்ணில் பெரும்பகுதியை மீட்டு எமக்கென ஒரு அரசை அமைக்கவென நாம் களத்தில் நிற்கும் வேளையிலே, எமது இனத்தின் கலை, பண்பாடுகளை, வரலாற்றைக் காப்பதற்கு எமது அறிஞர்களும் பேராசிரியர்களும் முன்வர வேண்டும் அது அவர்களது கடமையாகும்.'

இவ்வாறு நேற்றுக்காலை யாழ். பல்கலைக்கழகத்தில் இடம் பெற்ற வரலாற்றுக் கருத்தரங்கில் தொடக்கவுரை ஆற்றிய விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் சுப்பிரமணியன் தெரிவித்தார்;

மேலும் அவர் பேசுகையில் இங்கு வரலாற்றுப் பாடம் பற்றி ஆராய, கருத்துரைகளை வழங்க பேராசிரியர்களும், ஆசிரியர்களும், அறிஞர்களும் கூடியுள்ள இந்தச் சபையிலே எமது இனத்தின் மேன்மைக்காக விடிவுக்காக வரலாறாகிவிட்ட மூவாயிரத்துக்கும் அதிகமான மாவீரர்களை தமிழீழ வரலாற்றுக்காக ஒப்படைத்து நிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சார்பில் வரலாறு பற்றி நாம் கொண்டிருக்கும் பார்வையைத் தெளிவுபடுத்த விழைகின்றேன்.

படித்தவர்கள் பேராசிரியர்கள் கூடியுள்ள இந்த அவையிலே மாணவப்பருவத்திலேயே விடுதலைப் போராட்டத்தோடு எம்மை இணைத்துவிட்ட நாம், பேச முன்வந்திருக்கிறோமென்றால் பண்டைய வரலாற்றுச் சிறப்பை மீண்டும் பெற்றுவிட வேண்டும் என்ற எமது வேட்கையை வெளிப்படுத்த வேண்டுமென்ற வேணவாவினால்தான்.

பண்டைய தமிழன் பெருமைபட வாழ்ந்திருக்கிறான்; ஆனால், அந்த வரலாறுகள் உரிய முறையில் எழுதப்படவில்லை; பேணப்படவில்லை. அன்றைய வரலாறு மட்டுமல்ல இன்றும் அதே நிலைதான் நீடிக்கின்றது. தமிழனின் வரலாற்றுப் பெருமைகள் பல மறைக்கப்படுகின்ற தன்மைகளை இன்றும் காண்கின்றோம்.

இருபது முப்பது ஆண்டுகளுக்கு முன் நாம் பள்ளியில், கல்லூரியில் படித்த வரலாறு மறைக்கப்பட்டு வேறு உண்மைக்குப் புறம்பான வரலாறு இன்று பாடசாலைகளிலும், கல்லூரிகளிலும் திணிக்கப்பட்டிருக்கின்றது;

யாழ்ப்பாண அரசுகளின் வரலாறு. சங்கிலியனின் வீர வரலாறு, எல்லாளனின் வரலாறு என முன்னர் சொல்லிக் கொடுக்கப்பட்ட தமிழனின் ஏற்றமிகு வரலாறுகள் மறைக்கப்பட்டு, 2,500 ஆண்டுகளாக சிங்களவர்கள் வாழ்ந்து வரும் இந்த நாட்டிலே தமிழர்கள் 13ஆம் நூற்றாண்டின் பின் வந்தேறிய குடிகள் என்பது போன்று உண்மைக்குப் புறம்பாக வரலாறு திணிக்கப்படுகிறது.

இலங்கையில் தமிழன் வாழ்ந்ததற்கு, ஆண்டதற்கு வரலாற்றுச் சான்றுகள் கிடைக்கவில்லை என்று கூறி எமது வரலாற்றை மறைக்கும் முயற்சி இன எதிரிகளால் திட்டமிட்டு மேற்கொள்ளப்படுகின்றது.

திணிக்கப்பட்ட திரிக்கப்பட்ட வரலாறுகள் திருத்தப்பட வேண்டும். மறைக்கப்பட்ட வரலாறுகள் வெளிக்கொணரப் பட வேண்டும். எமது வரலாற்றாளர்கள், ஆய்வாளர்கள் இந்த எண்ணத்தோடு கடமையுணர்வோடு செயற்பட வேண்டும்.



ஒரு இனத்தை அழித்தொழிக்க எண்ணிச் செயற்படும் வல்லாதிக்கவாதிகள் அந்த இனத்தின் தேசிய அடையாளங்கள் அனைத்தையும் அழித்தொழிக்க அனைத்து வழிகளிலும் முயல்வர் இது உலகெங்கிலும் நடைமுறையில் இருந்துவரும் நிகழ்வுகள்தான்

இந்திய வரலாற்றை எழுதிய பல வடஇந்திய வரலாற்றாளர்கள் தமிழர் வரலாற்றை முற்றாக மறைத்தனர். அதற்கு அவர்கள் கூறிய காரணம், தென்னிந்தியர் பற்றிய வரலாற்றுச் சான்றுகள் கிடைக்கவில்லை என்பதுதான். அதுபோன்றுதான் சிங்கள ஆட்சியாளர்களும். வரலாற்றாளர்களும், அறிஞர்களும் வேண்டுமென்றே திட்டமிட்டு தமிழீழ வரலாற்றை மறைக்க முற்படுகின்றனர்.

பௌத்தமத இலக்கியமான மகாவம்சத்தை வைத்து தம் இன வரலாற்றை வெளிப்படுத்திவரும் சிங்கள இனம் எமக்கு வரலாறு இல்லை என்கிறது. தமிழீழப் பகுதியில் தொல்பொருள் ஆய்வுகள், அகழ்வாய்வுகள் முறையாக நிகழ்த்தப்படவில்லை. கிடைத்த தொல்பொருள்கள் முற்று முழுதாக ஆராயப்படவில்லை. பல தொல் பொருள்கள் முற்றாக அழிக்கப்பட்டு விட்டன, இந்த நிலைகளையெல்லாம் எண்ணிப் பார்த்து மாணவர்களுக்கு எமது வரலாற்றை தெளிவான முறையில் அளிக்க வேண்டும்.

தமிழீழத்தில் இதுவரை கிடைத்த தொல் பொருள்கள் வெளிப்படுத்திய உண்மைகள், வரலாற்றுத்துறை மாணவர்கள் மேற்கொள்ள வேண்டிய ஆய்வு முயற்சிகள் என்பனபற்றி மாணவர்களுக்கு விளக்கிட வேண்டும்;

எல்லாவற்றிற்கும் மேலாக வரலாற்றின் இன்றியமையாமை பற்றியும், வரலாற்றில் தமிழர்கள் பின்தங்கியிருப்பது பற்றியும் அதற்கான காரணிகள் பற்றியும் மாணவர்களுக்கு எடுத்து விளக்க வேண்டும்.

மாணவர்களுக்கு வரலாற்றுப் பாடத்தை எடுக்கும் சில ஆசிரியர்களே வரலாற்றில் ஆர்வமற்றவர்களாக இருக்கின்றார்கள்; பாடத்தை அப்படியே வாசிக்க வைத்து சில விளக்கங்களைக் கூறுவதுடன் வரலாற்றுப் பாடத்தை முடித்துக் கொள்கிறார்கள்.

வரலாறு என்றால் என்ன? ஒரு இனத்துக்கு வரலாற்றின் இன்றியமையாமை என்ன? என்பதையெல்லாம் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு எடுத்து விளக்கி, வரலாற்றின்மீது மாணவர்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டும்.

நிகழ்வுகளை ஆதாரத்துடன் எடுத்து விளக்குவதுதான் வரலாறாகும். ஆதாரமற்ற கற்பனை இலக்கியங்கள், இதிகாசங்கள், நாடகங்கள், நாவல்களையெல்லாம் வரலாறாக எடுத்துக்கொள்ள முடியாது. பழைய வரலாற்றுக்குப் போதிய ஆதாரங்கள் கிடைக்காதவிடத்து கிடைத்த ஆதாரங்களை வைத்து ஊகத்தின் அடிப்படையில்தான் வரலாற்றாசிரியர்கள் வரலாற்றை எழுதி வருகிறார்கள்;

பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே எமது இனம் பெருமைப்பட வாழ்ந்திருக்கிறது என்பது உறுதிபடத்தெரிகிறது. எமது பண்டைய இலக்கியங்களிலிருந்து எமக்குக் கிடைக்கும் வரலாற்றுக்குறிப்புக்களைவிட அந்த இலக்கியத்தின் தரங்கள், தன்மைகள் என்பன பண்டைத் தமிழர்கள் படித்த, பண்பட்ட இனமாக வாழ்ந்திருக்கிறார்கள் என்பதற்கு சான்றாக அமைகின்றன. ஆனால் அந்த இலக்கியங்கள் படைக்கப்பட்ட சரியான காலங்கள் எமக்குத் தெரியவில்லை. அந்த இலக்கியங்களில் காலம் பற்றிக் குறிப்பிடவில்லை.

தொலை நோக்கோடு அன்று வரலாற்றைக் குறித்து வைக்கின்ற வழக்கம் இல்லாமையே அதற்கு காரணமாகும் சில இலக்கியங்கள் படைக்கப்பட்டது அரங்கேற்றப்பட்டது எந்த அரசன் காலத்தில் என்பதைமட்டும் அறியக் கூடியதாக இருக்கின்றது;

யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்று நடைபெற்ற வரலாற்றுக் கருத்தரங்கில் தொடக்கவுரை ஆற்றிய விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர் திரு. சுப்பிரமணியன் அவர்களின் உரை இங்கே பிரசுரிக்கப்படுகிறது. இதன் தொடர்ச்சி நாளை இதழில் வரும்

# தீங்கின்றி இஸ்ரேலியர் விடுதலையாவர்

(சிறீநகர்)

தங்கள் வசம் இருக்கும் ஒரேயொரு இஸ்ரேலியரை தீங்கு எதுவும் இழைக்காமல் விரைவில் விடுதலை செய்யப் போவதாக காஷ்மீர் தீவிரவாதிகள் அறிவித்திருக்கிறார்கள்,

ஜம்மு - காமீர் விடுதலை முன்னணி காணமற் போனதாகக் கூறப்பட்ட யயிர் யிட்ஸ் ஹாகி என்பவரைக் கடத்திச் சென்றதாகக் கூறியுள்ளது; கடத்தப்பட்ட மொத்தம் ஆறு இஸ்ரேலியர்களில் ஒருவர் கொல்லப்பட்டார். மற்றும் நால்வர் தப்பிவிட்டனர் என்பது தெரிந்ததே.

ஆனால் யிட்ஸ் ஹாகி எப்போது, எங்கே விடுதலை செய்யப்படுவார் என்பதை தீவிரவாதிகள் கூறவில்லை; இதனிடையே காஷ்மீர்க்கு வெளிநாட்டு உல்லாசப் பயணிகளுக்கு தடை விதிப்பதா? அல்லது அங்கு செல்ல வேண்டாம் என அவர்களுக்கு ஆலோசனை கூறுவதா என்பது பற்றி இந்திய அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது;

## பயிலுநர் ஆசிரியருக்கான தொலைக் கல்வி பயிற்சி

(பருத்தித்துறை)

யாழ்.மாவட்டத்தில் பணியாற்றும் பயிலுநர் ஆசிரியர்களுக்கு தொலைக்கல்வி பயிற்சி நெறிகளை ஆரம்பிப்பதற்கான துரித நடவடிக்கைகளை கல்வித் திணைக்களம் மேற்கொண்டுள்ளது. யாழ்.மாவட்டத்திலுள்ள ஐந்து கோட்டக் கல்வி அலுவலகங்களுக்கும் பயிலுநர் ஆசிரியர்களுக்கான தொலைக்கல்வி பயிற்சி நெறி பற்றிய அறிவுறுத்தல்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளன.

இத்தொலைக்கல்விப்பயிற்சி நெறி விரிவுரையாளர்களாக ஐந்து கோட்டக் கல்வி அலுவலகப்பகுதிகளுக்கும் தலா ஐவர் வீதம் இருபத்தைந்து தொலைக்கல்விப் பயிற்சி நெறி விரிவுரையாளர்களைக் கல்வித் திணைக்களம் நியமித்துள்ளது. இப்பயிற்சிநெறி விரிவுரையாளர்களுக்கு கல்வித் திணைக்களம் குறுகியகால அறிவுறுத்தல்களை வழங்கியதும் பயிலுநர் ஆசிரியர்களுக்கான தொலைக்கல்விப் பயிற்சி நெறி ஆரம்பமாகும்.

தற்போது பயிலுநர் ஆசிரியர்கள் கல்வி கற்பிக்கும் பாடசாலைகளில் நடைபெறவுள்ள இப்பயிற்சிகளுடன் பாடசாலை லீவு நாட்களில் இவ் ஆசிரியர்களுக்கான மேலதிக விரிவுரைகளும் வழங்கப்படும்.

இவையாவற்றிற்கும் தற்போது நியமிக்கப்பட்டுள்ள தொலைக்கல்வி பயிற்சி நெறி விரிவுரையாளர்கள் பொறுப்பாக இருப்பார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (25)

## ஜெயலலிதாயோசனைகுறித்து சிறிலங்கா கவனமாகவுள்ளது

**- பிரட்மன் வீரக்கோன்**

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் புதிய உடன்படிக்கையொன்று செய்து கொள்ளப்படவேண்டுமென்று தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா தெரிவித்த கருத்துக் குறித்து சிறிலங்கா மிகக் கவனமாக நடந்து கொள்வதோடு இது தொடர்பாக மேலும் இந்தியாவின் யோசனைகளை எதிர்பார்க்கிறது.

இவ்வாறு சிறிலங்கா ஜனாதிபதியின் சர்வதேசவிவகாரங்களுக்கான ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் செல்வி ஜெயலலிதாவின் அறிக்கை பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில் கூறினார்.

இது பற்றி நாங்கள் கவனத்திற்கு எடுத்துக்கொண்டோம். இந்திய அரசாங்கத்தின் யோசனைகள் பற்றி விவரங்களுக்காக நாங்கள் காத்திருக்கிறோம் என்றார்.



## காங்கிரசை ஆதரிப்பதில்லை; தெலுங்கு தேசம் முடிவு

(டில்லி)

டில்லியில் இந்திரா காங்கிரஸ் அரசைத் தனது கட்சி ஆதரிக்காது என்று தெலுங்கு தேசம் கட்சியின் தலைவர் என்.ரி.ராமராவ் கூறியிருக்கிறார் எனினும் பஞ்சாப், காஷ்மீர் போன்ற தேசியப் பிரச்சினைகளில் தமது கட்சி மத்திய அரசுக்கு ஒத்துழைப்பு வழங்கும் என்றும் அவர் கூறினார்.

புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட தெலுங்கு தேசக்கட்சியின் பாராளுமன்ற அங்கத்தினர் கூட்டம் ஒன்றுக்குப் பின் ஹைதராபாத்தில் செய்தியாளரிடம் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

லோக் சபாவுக்குச் சபாநாயகரைத் தேர்ந்தெடுப்பதில் கொதுக்கருத்தின் அடிப்படையில் வேட்பாளர் ஒருவர் தெரிவு செய்யப்படுவதையே தமது கட்சி ஆதரிப்பதாகவும் ராமராவ் கூறினார். ரவிறோய் பொருத்தமான வேட்பாளராக இருக்கக்கூடும் என்று அவர் கூறியிருக்கிறார். சிறுபான்மை காங்கிரஸ் அரசு எதிர்க் கட்சிகளின் கருத்தை மதிக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

## ஸ்லாவேனியா நிராகரிப்பு

(பெல்கிறேட்)

யூகோஸ்லவியாவிலிருந்து பிரிந்து சென்ற ஸ்லாவேனியக் குடியரசு, உடனடியானபோர் நிறுத்தத்திற்கு யூகோஸ்லாவிய இராணுவம் விட்ட பிரகடனத்தை ஏற்க மறுத்துள்ளது. இது நாட்டில் உள்நாட்டுப் போர் ஏற்படும் அபாயத்தைத் தோற்றுவித்துள்ளது.

ஸ்லாவேனியக் குடியரசுச் சட்டப் பேரவை சென்ற மாதம் நிறைவேற்றிய சுதந்திரப் பிரகடனத்தை அதன் வானொலி ஒலிபரப்பு மீளவும் உறுதிப்படுத்தியது.

ஐரோப்பிய சமுதாய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் ஏற்பாடு செய்த உடன்பாட்டின் செயற்பாட்டைக் கண்காணிக்கப் பார்வையாளர்களை அனுப்பி வைக்கும்படியும் அந்நாடுகளை குடியரசுச்சட்டப் பேரவை கேட்டுக் கொண்டுள்ளது.

## அஸாமில் காங்கிரஸ் அமைச்சரவை

அஸாமில் இந்திரா காங்கிரஸ் அமைச்சரவை நேற்றுக் காலை பதவியேற்றது. கேகியா தலைமையில் பதவியேற்ற 36 உறுப்பினர்களைக்கொண்ட இவ் அமைச்சரவையில் 21 பேர் கபினற் அமைச்சர்கள், 15 பேர் இணையமைச்சர்கள். இரண்டு முன்னாள் முதலமைச்சர்கள் கபினற் அமைச்சர்களாகப் பதவியேற்றுள்ளார்கள். இத்துடன் எட்டுமாதகால ஜனாதிபதி ஆட்சி அஸாம் மாநிலத்தில் முடிவுக்கு வந்தது.

## யூகோவில் சமரசம்; ஐரோப்பிய சமூகம் முயற்சி

(லக்ஸம்பேர்க்)

யூகோஸ்லாவியாவிற்கு சமரசக் குழுவொன்றை அனுப்பி வைக்க ஐரோப்பிய குடும்ப நாடுகள் முடிவு செய்துள்ளன.

நேற்று முன்தினம் லக்ஸம்பேர்க் நகரில் கூடிய ஐரோப்பிய குடும்ப நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் மட்டக் கூட்டத்தில் யூகோஸ்லாவியா பிரச்சினை நிகழ்ச்சி நிரலில் முதலிடம் பெற்றது.

யூகோஸ்லாவிய சமஷ்டி அமைப்பில் யூகோ மத்திய அரசுக்கும் பிரிவினை கோரும் மாநிலங்களுக்கும் இடையே சமரசம் செய்து வைக்க பிரிட்டன், இத்தாலி, லக்ஸம் பேர்க் ஆகிய மூன்று நாடுகளின் அமைச்சர்கள் அடங்கிய தூதுக்குழுவை அனுப்ப அவை முடிவு செய்துள்ளன. அந்தக் குழு உடனே புறப்படுகின்றது. யூகோஸ்லாவியாவின் நிலைமை தெளிவாகும்வரை அதற்கான உதவி வழங்கலையும் நிறுத்தி வைக்கவும் ஐரோப்பிய குடும்ப அமைப்புநாடுகள் முடிவு செய்துள்ளன.

## சேஷனைப் பதவி விலக ஜனதாதள் கோரிக்கை

தலைமைத் தேர்தல் கமிஷனர் டி.என். சேஷன் தாமாகவே பதவி விலகவேண்டும் அல்லது குற்றச்சாட்டுகளுக்கு இலக்காக நேரிடும் என்று ஜனதாதள் கட்சி கூறியுள்ளது.

பஞ்சாபின் தேர்தலை ஒத்திவைத்ததையும், பீகார் மற்றும் உத்தரப் பிரதேசத்தில் சில தொகுதிகளில் தேர்தலை ரத்துச் செய்ததும் திரு டி.என் சேஷனின் தன்னிச்சையான நடவடிக்கைகள் என்று கூறிய ஜனதாதளின் தேசிய நிர்வாகக்குழு டி.என் சேஷன் தேர்தல் நடத்திய விதம் சரியல்ல என்று தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

## சிவ்சங்கர் பதவி இராஜினாமா

(புதுடில்லி)

இந்திரா காங்கிரஸ் கட்சியின் ராஜ்யசபா தலைவராக இருந்த திரு பி சிவ்சங்கர் தமது பதவியை இராஜினாமா செய்துள்ளார். ராஜ்யசபாவில் கட்சித்தலைவராக இருப்பவருக்கு மத்திய அமைச்சரவையில் இடமளிக்கும் மரபுக்கு மாறாக திரு. பி சிவ்சங்கருக்கு இடமளிக்கப்படவில்லை என்பது கவனிக்கத்தக்கது. முன்னாள் பெற்றோலியத்துறை அமைச்சரான திரு. பி. சிவ்சங்கர், மத்திய அமைச்சர் சரத் பவாருக்கு நெருக்கமானவராவார்.

## ஒப்சேவர் கட்டுரைக்கும் எமக்கும் தொடர்பில்லை

**- பல்கலை. புத்திஜீவிகள் மறுப்பு**

யாழ் பல்கலைக் கழகக் கல்விமான்கள், தமக்கும் சண்டே ஒப்சேவர் பத்திரிகையில் வெளிவந்த தொடர் கட்டுரைக்கும், அது உள்ளடக்கிய கருத்துக்களுக்கும் எவ்வித தொடர்புமில்லை என்று மறுப்புத்தெரிவித்துள்ளனர்,

யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்க(மனித உரிமைகள்)த்தினால் எழுதப்பட்டதாகக் கருதப்படும் 'மனித துன்பம் மற்றும் அழிவுகள் பற்றிய அரசியல்' என்ற கட்டுரைத் தொடர் மார்ச் 24ல் இருந்து சண்டே ஒப்சேவர் பத்திரிகையிலும், லங்கா கார்டியன் உட்பட வேறு சில செய்தி இதழ்களிலும் வெளிவந்தது.

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான ஆசிரியர் சங்கம் மேற்படி கட்டுரைக்கும் தமக்கும் எவ்வித காரண காரியத் தொடர்பும் இல்லை என்று மறுப்போடு கட்டுரையை யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சமூகத்தின் கருத்துப் போன்ற பாணியில் வெளியிடப்பட்டிருப்பது கவலைக்குரியதாகும் என்று கண்டித்துள்ளது.

பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவர் பேராசிரியர் என். கே. சிற்றம்பலமும் பிரச்சினைக்குரிய கட்டுரைக்கும் யாழ். பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கும் தொடர்பில்லை என்றும் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டிருக்கும் கருத்துக்கும் தமக்கும் உடன்பாடு இல்லை என்றும் தெரிவித்துள்ளார்,

### ருமேனியாவில்

இந்த வாலிபர்கள் ருமேனியாவில் அநாதரவான நிலையில் வந்து சேர்ந்தனர் என்றும் ருமேனிய அரசாங்கம் இவர்களை திருப்பி கொழும்புக்கு அனுப்பி வைத்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

திருப்பி அனுப்பப்பட்ட ஒவ்வொரு வாலிபரும 1,75 000 ரூபா வீதம் முகவர்களிடம் கொடுத்ததாக தெரிவிக்கப்படுகிறது. திருப்பி அனுப்பப்பட்டவர்களில் தமிழ் இளைஞர்களும் அடங்குவர்.

### பறிமுதல்

அன்பளிப்புச் செய்யப்பட்டதாக சுங்கப் பகுதியின் விசேட பணியகம் தெரிவித்தது.

எதிர்காலத்தில் இவ்வாறு கைப்பற்றப்படும் இத்தகைய பொருட்கள் பறிமுதல் செய்யப்படுவதுடன், தொடர்ந்தும் வடக்குக் கிழக்கிலுள்ள இராணுவத்தினருக்கு வழங்கப்படும் என்று சுங்கப் பகுதியின் பிரதி இயக்குநர் காமினி ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

### வரதனை

களின் குண்டு நிபுணர் என வர்ணிக்கப்படும் இந்த நபர் சிறையிலிருந்ததாகவும்.

சிறிலங்கா முன்னாள் பாதுகாப்புஇணையமைச்சர்ரஞ்சன் விஜேரத்தினாவின் மரணம் வரதனின்செயல் எனவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணப் புலோலியைச் சேர்ந்த வரதன் லெபனானில் யுத்தப் பயிற்சி பெற்றுள்ளார் என்றும், விடுதலைப் புலிகள் தலைவர் வே. பிரபாகரனின் விசேட உத்தரவின் பேரில் இவர் கொழும்பு வந்தார் என்றும், இந்த நபர் இன்னும் குண்டுகளை வெடிக்கவைக்க இருப்பதாகவும் சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது.

### அகதிகள்

நேற்று சேலத்தில் பத்திரிகையாளரிடம் பேசிய அவர் இது தொடர்பாகத் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவைச் சந்தித்து இந்தக் கருத்தை மத்திய அரசிடம் வலியுறுத்தும்படி கேட்டுக் கொள்ளப்போவதாகக் கூறினார்.

### சுவிசும்

கன்டோன் அரசாங்கங்களை நிர்ப்பந்திக்கும் வகையிலான புதிய சட்ட விதிகளைக் கொண்டு வரப்போவதாக அவர் தெரிவித்தார். இச்சட்ட விதிகள் பாராளுமன்ற அங்கீகாரத்தைப் பெறவேண்டும்.

தஞ்சக்கோரிக்கை நிராகரிக்கப்பட்டவர்கள் செய்யும் மேன்முறையீடுகளை ஆறு மாத காலத்திற்குள் அதிகாரிகள் கவனித்து நடவடிக்கைகள் பூர்த்தியாவதை உறுதிப்படுத்துவதற்கான விதிகளும் கொண்டு வரப்படவிருக்கின்றன. மேன் முறையீட்டு விண்ணப்பங்களை பரிசீலிக்க தற்போது காட்டப்படும் நீண்ட தாமதத்தை பயன்படுத்தி பல தஞ்சக் கோரிக்கையாளர்கள் வேலை பெற்று உள்ளூரில் இருப்பவர்களையும் விட கூடுதலான சம்பளங்களையும் பெறுகிறார்கள்.

விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டவர்களில் 50 சதவீதத்திற்கும் அதிகமானோர் தலைமறைவாகிவிட்டனர் என்றும் பலர் சட்ட விரோதமாக வேலை செய்கின்றார்கள் என்றும் சுவிஸ் நீதி அமைச்சு கணக்கிட்டுள்ளது.

புதியசட்டவிதிகளை அமுல்படுத்தாவிட்டால், எல்லைகளினூடாக சட்ட விரோத ஊடுருவல்களைத் தடுக்க இராணுவ பிரிவுகளைப் பயன்படுத்த வேண்டி ஏற்படும் என்றும் கொலர் தெரிவித்தார்.

அதேவேளை ஜேர்மனியில் இருந்து சுமார் ஒருலட்சம் அகதிகளை வெளியேற்ற ஜேர்மன் அரசாங்கம் தீர்மானம் எடுத்திருப்பது தெரிந்ததே.

### மரண

கள் இயக்கத்தினை ஒரு சிலர் களங்கப்படுத்துவது அனுமதிக்க முடியாத பாரதூரமான குற்றமாகும். ஆகவே பொதுமக்களாகிய நீங்கள் உரிமையோடும், சுதந்திரமாகவும் தவறுகளைச் சுட்டிக்காட்டி உங்கள் புனிதமான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை வளர்க்க முன்வரவேண்டும் இவ்வாறு இம்மரணங்கள் தொடர்பாக புலிகள் விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மரண அறிவித்தல்

**அருட்திரு ஜான் ஸ்பம்பதி அ.ம.தி.**

**REV. FR. JEAN SPAMPATTI OMI**

அமல மரித் தியாகிகள் சபையைச் சார்ந்த அருட்திரு. ஜான் ஸ்பம்பதி அடிகளார் 30 06-91 இல் காலமாகிவிட்டார். கொழும்புத்துறை அமல உற்பவத்தில் இவரது பூதவுடல் அஞ்சலிக்காக இன்று 01-07-91 திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிவரை வைக்கப்பட்டு பின்பு யாழ் மரியன்னை பேராலயத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

பேராலயத்தில் பிற்பகல் 4 மணிக்கு நடைபெறும் இரங்கற் கூட்டுத் திருப்பலியுடன் இவரது இறுதிச் சடங்குகளும் இடம்பெறும்.

தொடர்பகம்<br>
657/1, ஆஸ்பத்திரி வீதி,<br>
யாழ்ப்பாணம்.

அருட்திரு P.P பிலிப் அ.ம.தி.<br>
அமல மரித் தியாகிகள்<br>
மாகாணத் தலைவர்

(R/1500)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 01 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.